**மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் - 2022**

---

மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 9186-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய தேசிய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. வட மாகாணத்தின் யாழ்ப்பாணப் பகுதியில் (நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு) 3 தீவுகளில் உள்ள சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவு மற்றும் கிராமப்புற சமூகங்களுக்கான உற்பத்தி எரிசக்தி பயன்பாட்டை ஆதரிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 288 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 2 மில்லியன் தொகையான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஏடீபீ) நிர்வகிக்கப்பட்ட வறுமைக் குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 மார்ச் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 தீர்க்கப்படாத மீதிகள்

| கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | தீர்க்கப்படாத காலம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைமுறை வேலையின் பெறுமதி ரூபா 229.06 மில்லியனாக காட்டப்பட்டிருந்த போதிலும் NWSDB இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 283.25 மில்லியனாகக் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க,மேற்கூறப்பட்ட இரண்டு நிதிக்கூற்றக்களிற்கிடையில் ரூபா 54.19 மில்லியன் இணக்கஞ்செய்யப்படாத மீதி அவதானிக்கப்பட்டது. | 54.19 | ஒரு வருடம் | தற்போது, செயற்திட்டமானது என்டபிள்யூஎஸ்டிபீயின் நிதிப்பிரிவின் வழிகாட்டலுடன் செயற்திட்டம் மற்றும் NWSDB செலவீனங்களுடன் மொத்தமாக 31 திசெம்பர் 2022 இல் உள்ளவாறு நடைமுறைவேலையை இணக்கஞ்செய்வதில் விரிவான வேலையை செயற்திட்டம் தற்போது தயாரிக்கின்றது. | வேறுபட்ட மீதிகளை இனங்காண்பதற்கான மீதிகளை கணக்கிணக்கம் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை/கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | ஒழுங்குபடுத்தல் குழுக்கூட்டம் 02 மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெறவேண்டியபோதிலும் செயற்திட்ட தொடக்கத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அவ்வாறான கூட்டம் எதுவும் நடைபெற்றிருக்கவில்லை. | செயற்திட்ட ஒழுங்குபடுத்தல் குழுவினை ஏற்பாடு செய்யும் பொறுப்பு நிறைவேற்றல் முகவராண்மைக்கு வழங்கப்பட்டதுடன் இது NWSDB இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 128(1)உ, 507 மற்றும் 756 | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு வருடாந்த கணிப்பீட்டுச் சபையும் மேற்கொள்ள வேண்டும். எனினும், செயற்திட்டத்திற்கான வருடாந்த கணிப்பீட்டுச்சபை 31 மார்ச் 2023 வரையிலும் நடைபெற்றிருக்கவில்லை. | NWSDB வருடாந்த கணிப்பீட்டு சபையை மேற்கொள்ளும் என்பதுடன் இந்த வருட இறுதியிலிருந்து அறிக்கை அனுப்பப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | தாபன விதிக்கோவையின் XV இன் 4.6 ஆம் அத்தியாயம் | கற்கையின் கிரயமானது முழு அளவிலோ அல்லது பகுதியளவிலோ இலங்கை அரசாங்கத்தால் அல்லது வெளிநாட்டு அரசாங்க முகவராண்மையால் ஏற்றுக்கொண்ட பயிற்சிகளினைத் தவிர்த்து அனைத்து விடயங்களிற்கும் எழுத்துமூல உடன்படிக்கை மற்றும் / அல்லது முறி தேவைப்பட்ட போதிலும் செயற்திட்ட மானியத்தின் கீழ் ரூபா 8,341,355 இனை ஈடுபடுத்தி அமெரிக்காவில் நடைபெற்ற ஆர்ஓ விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் 02 உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எழுத்துமூல உடன்படிக்கை அல்லது முறி இல்லாது பங்குபற்றியிருந்தனர். | எதிர்காலத்தில் உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளிற்கான விதிகளை பின்பற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை NWSDB எடுக்கும். | சட்டங்கள் மற்றும் விதிகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயன்முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| இல. | செயற்திட்டக் கூறு | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 150 கனமீற்றர்/ நாள் கடல்நீர் மறுபக்க சவ்வூடுபரவல் பொறியை உரிய சிவில் வேலைகளுடன் வழங்கி நிறுவுதலிற்கான ஒப்பந்தம். | இந்த செயற்பாட்டின் ஒப்பந்தம் 2021 ஒக்தோபர் 21 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட போதிலும் 70 கனமீற்றர் அளவிலான நீர் நாளாந்த அடிப்படையில் 2021 இலிருந்து உற்பத்தி செய்யப்படுவதுடன் மூன்று தீவுகளில் வாழும் 1662 குடும்பங்களைத் தாண்டி 204 நீர் தொடர்புகள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் நலனாளிகளுக்கு சென்றடைந்திருக்கவில்லை. | இரட்டை புதுப்பிக்கத்தக்க சக்தி முறைமையினை தாபிப்பதற்கான பிரதான வேலை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைச்சபையின் கட்டுப்பாட்டினைத் தாண்டியுள்ள அரச கொள்கையை மாற்றுவதனால் செயற்பாட்டிலிருந்திருக்கவில்லை. | தாமதப்படுத்தாமல் நலனாளிகளின் நோக்கங்களை பூர்த்திசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2.0 தொண்/ நாள் ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் குளிர்பதன முறைமையை | CEB இன் இரட்டை மின்வலு செயற்திட்டத்திடமிருந்தான மின்வலுவை வழங்காமையால் விலைமனு கோரலானது இடைநிறுத்தப்பட்டது. | CEB இன் இரட்டை மினவலு முறைமை இன்மையால் ஐஸ்கட்டிகளை | வெளிநாட்டு உதவி பயன்படுத்துவதை அதிஉச்சப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| மேற்கொள்வதற்கான நிர்மாணம். | அதனால், இந்த மானியத்தின கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலையிடமிருந்தான மூன்று தீவுகளிலுள்ள மீனபிடித்தல் சமூகத்திற்கு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் இழக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கும் பொறியை அமுல்படுத்த இயலாதுள்ளதுடன் இது NWSDB இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ளது. | வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கடல்நீர் மறுபக்க சவ்வூடுபரவல் பொறியானது 2020 யூலை இலிருந்து தொடங்கப்பட்டிருந்ததுடன் இதன் உத்தரவாதக்காலம் 2025 யூன் வரையிலும் 05 வருடங்கள் காலப்பகுதிக்காகவுள்ளது. 2023 பெப்ரவரியளவிலும் அதிகூடிய இயலளவில் பிரிவு செயற்படாதபோதிலும் உத்தரவாத காலப்பகுதியில் முழுஇயலளவில் பிரிவானது செயற்படுகின்றபோது ஏற்படுகின்ற உள்ளக தவறுகளை ஈடுசெய்யமுடியாத இடரொன்றுள்ளது. | SWRO பொறியானது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் முழு இயலளவில் பரிசோதிக்கப்பட்டது. உத்தரவாதம் முழு பொறியிலிலுள்ள தவறுகளை மேவுகை செய்வதுடன் இது செயற்பாட்டு இயலளவில் தங்கியிருக்கவில்லை. | பிரிவினை அதிகூடிய இயலளவில் செயற்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டு இயந்திர பொறியிலாளர்கள் பங்குபற்ற வேண்டியிருந்த கடல்நீர் மறுபக்க சவ்வூடுபரவல் பொறி (SWRO) தொடர்பான வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இயந்திர பொறியிலாளர் மற்றும் சிவில் பொறியிலாளர் செயற்திட்ட நிதியத்தின் ரூபா 8.3 மில்லியனை செலவழித்து பங்குபற்றியிருந்ததுடன் சிவில் பொறியிலாளர்கள் மேற்கூறப்பட்ட பொறி தொடர்பாக எந்தவித கடமைகளையும் மேற்கொள்ளவில்லை. | பதில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்கு தகுதிவாய்ந்த மற்றும் உரிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியதுடன் செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |